**15.09.2025 அசல் வழக்கு எண்.264/2008 Starting Time : 01.26 p.m.**

**வா.சா.1 திரு.பழனிவேல் என்கிற வீராசாமி த/பெ.நடேசன்.**

**சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, 1,5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

**1**. வழக்கு மொத்தம் நான்கு அயிட்ட சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இன்றைய தேதி வரை வழக்கில் உள்ள நான்கு அயிட்ட சொத்துக்களையும் 1ஆம் பிரதிவாதி செல்வராஜ் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். தாவாவில் குறிப்பிட்டுள்ள நான்கு அயிட்ட சொத்துக்களில் நான் 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்களை பொறுத்து தான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல, அனைத்து சொத்துக்களுக்கும் பிரதிவாதிகளிடம் உள்ளதால் அவற்றை பொறுத்து பரிகாரம் கேட்டுள்ளேன்.

**2**. எனது தாத்தாவின் பெயர் துரைசாமி என்றால் சரிதான். எனது தாத்தா துரைசாமியுடன் பிறந்த வீராசாமி மற்றும் ரங்கசாமி ஆகியோருக்கு வாரிசுகள் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது தாத்தா துரைசாமிக்கு எனது தகப்பனார் நடேசன் மட்டும் தான் வாரிசு என்றால் சரிதான். எனது தாத்தாவுடன் பிறந்த ரங்கசாமி எனது பெயருக்கு உயில் எழுதி வைத்தார் என்றும், அதன் அடிப்படையில் தான் தாவா சொத்துக்களில் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான்.

**3**. மேற்படி உயில் எந்த ஆண்டு எழுதப்பட்டது என்றால் 1.3.1956ஆம் வருடம் எழுதப்பட்டதாகும். தற்போது எனக்கு என்ன வயதாகிறது என்றால் 70 வயதுக்கு மேல் ஆகிறது. மேற்படி உயில் எழுதும்போது எனக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் 3 வயது இருக்கும். உயில் பற்றி எனக்கு நேரடியாக எப்போது தெரிய வந்தது என்றால் 30 வருடங்களுக்கு முன்பு தெரிய வந்தது. உயில் சாசனத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. அதன் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உயில் ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

**4**. எதற்காக நான் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. உயில் ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் ஏதும் எனது வழக்குரையிலும் முதன்மை பிரமாண வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அசலை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மேற்படி உயில் ஆவணம் **வா.த.சா.ஆ.1**-ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

**5**. உயில் எழுதி வைத்த எனது சிறிய பாட்டனார் ரங்கசாமி என்ன மொழியில் கையெழுத்து செய்தார் என்றால் தெலுங்கில் கையெழுத்து செய்தார். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்துக்கான சிட்டா மற்றும் பட்டா நகல்களை வருவாய் துறையில் வாங்கி பரிசீலனை செய்தபோது என் தகப்பனார் பெயரோடு 1ஆம் பிரதிவாதியின் பெயரும் 3ம் அயிட்ட சொத்திற்கு கூட்டு பட்டாவாகவும், 1,2 மற்றும் 4 அயிட்ட சொத்துக்களுக்கு 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் பெயரில் பட்டா வழங்கப்பட்டதை தெரிந்துக்கொண்டேன் என்று குறிப்பிட்டுள்ளதற்கு அப்போது தான் பிரதிவாதிகள் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான், மேற்படி விவரம் தெரிந்த பிறகு தான் நான் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்தேன்.

**6**. 2008-ல் தான் எனக்கு தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்று தெரிய வந்து, அதற்கு பின்னிட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் எதன் அடிப்படையில் தாவா சொத்துக்களில் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டாவது பிரதிவாதிகள் தாவா சொத்தில் எதன் அடிப்படையில் அனுபவத்தில் இருக்கிறார்கள் என தெரிந்துக் கொண்டேனா என்றால் அனுபவ பாத்தியம் அடிப்படையில் இருக்கிறார்கள் என்று தெரிந்துக் கொண்டேன்.

**7**. **வா.த.சா.ஆ.1** உயில் ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். அதில் சொத்து விவரத்தில் பொதுவில் 1/3 பங்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகம் பிரியாத சொத்துக்களில் தான் பொதுவில் 1/3 பங்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி **வா.த.சா.ஆ.1** ஆவணம் எழுதிய பின்னிட்டு 1/3 பாகம் பிரித்து மேற்படி உயில் எழுதிய ரங்கசாமி என்பவருக்கு பிரித்து கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொத்து விவரத்தில் நான்கு எல்லைகள் குறிப்பிட்டு சொத்து விவரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்துக்கள் அவர்களது குடும்ப சொத்துக்கள் என்று குறிப்பிட்டுள்ள விவரம் நான் தெரிந்துக் கொண்டேனா என்றால் ஞாபகம் இல்லை.

**8**. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 1,2 பிரதிவாதிக்கும் 1ஆம் பிரதிவாதியின் சகோதரர் கோதண்டராமன் (5ஆம் பிரதிவாதி) ஆகியோருக்குள் குடும்ப பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். கடந்த 1980ஆம் ஆண்டு வழக்கு சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.284-ல் 4 செண்ட் இடத்தை பலராமன் கிரயம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பலராமன் கிரயம் பெறுவதற்கு முன் ராமகிருஷ்ணன், சிவராஜ் மற்றும் சுப்பிரமணியன் ஆகியோரின் குடும்ப சொத்தாக இருந்து வந்தது என்றால் சரிதான். மேற்படி நபர்களிடம் இருந்து பலராமன் கிரயமாக பெற்ற சொத்துக்களை தான் 1,2 மற்றும் 5ஆம் பிரதிவாதிகள் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

**9**. பலராமன் 1980ஆம் ஆண்டு கிரயம் பெற்ற சொத்துக்கள் தவிர வேறு சொத்துக்களும் அவருக்கு இருந்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பலராமன் 1980ஆம் ஆண்டு கிரயம் பெற்ற சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களும் இருந்தது என்றும், அவற்றை எல்லாம் சேர்த்து அவர்களது குடும்பத்திற்குள் பாகப்பிரிவினை செய்துக் கொண்டார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

**1,5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு வாய்தாவிற்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

**Ending time : 2.15 p.m.**

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.